22 DEC 2016
UNIVERSITY, SRI

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2014/2015 (ஒக்டோபர்/நவம்பர் 2016)

## SAS 2113 Classical Sociological Theory

நேரம் : 03 மணித்தியாலங்கள்

முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியிலிருந்து ஏதேனும் மூன்று வினாவிற்கும் மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி – I

01. (அ) சமூகவியலில் கோட்பாடானது நவீன காலத்தின் பிரச்சினைகளை எடுத்து ஆராய்வதாகும். எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
(10 புள்ளிகள்)

(ஆ) நேர்க்காட்சிவாதம் வலியுறுத்தும் அம்சங்களைக் குறிப்பிட்டு தெளிவுபடுத்துக.
(10 புள்ளிகள்)

02. (அ) ஒகஸ்ட் கொம்ற் (Auguste Comte) சமூக முன்னேற்றம், சமூக ஒழுங்கு என்பவற்றிற்கான விதிகளை விளக்கப்பயன்படுத்திய முறையியல்களைத் தெளிவுபடுத்துக.
(10 புள்ளிகள்)

(ஆ) எமைல் டெர்கைம் (Emile Durkheim) சமூகவியலை சமூக ஒருங்கிணைவின் அறிவியலாக நோக்கும் விதம் பற்றி விளக்குக.
(10 புள்ளிகள்)

03. (அ) ஒகஸ்ட் கொம்ற் மனித சிந்தனை வளர்ச்சியைப் படிநிலை வளர்ச்சிக்கூடாக தெளிவுபடுத்துமாற்றை எடுத்துக்கூறுக.
(20 புள்ளிகள்)

(ஆ) எமைல் டெர்கைம் குறிப்பிடும் சமூக அறிவியல் முறையியலை விபரிக்குக.
(10 புள்ளிகள்)

## பகுதி – II

01. "இயற்கை விஞ்ஞானத்தில் பயன்படுத்தப்படுகின்ற அணுகுமுறைகளும் ஆய்வுமுறைகளும் சமூகத்தினைக் கற்பதற்குப் பயன்படுத்த முடியும்" என்ற நேர்க்காட்சி வாதிகளின் கருத்தைப் பகுப்பாய்வு செய்க.

(20 புள்ளிகள்)

02. சமூக உண்மைகள் பற்றிய எமைல் டெர்கைமின் (Emile Durkhim) கருத்துக்களை விமர்சன ரீதியாக பரிசீலிக்குக.

(20 புள்ளிகள்)

03. எமைல் டெர்கைமின் தொழிற்பிரிப்புக் கோட்பாட்டைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

(20 புள்ளிகள்)

04. "சமூகத்தின் அடையாளமாகக் குலக்குறியம் செயற்படுகின்றது." எனும் விடயத்தை சமய வாழ்வின் அடிப்படை வடிவங்கள் எனும் நூலை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

(20 புள்ளிகள்)

*****